DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 325/2023

Prosecution Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரியம்மாள் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.மதுரைவீரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of May 2025.

(Accused present.)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் சூளேஸ்வரன்பட்டியில்குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். வருடம் எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் மார்ச் மாதம் 29 ம் தேதி நான் சி காலனி பகுதியில் உள்ள என்னுடைய வீட்டில் மெயின் கேட்டை சாத்திவிட்டு நானும் எனது மகள் ஆராத்தாளும் இருந்தோம். நான் என்னுடைய பேத்தியுடன் கைபேசியில் பேசிக்கொண்டிருந்தேன்.

2. எதிரி எங்களுடைய பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். நான் கைபேசியில் பேசியதை கேட்டுக்கொண்டு அருவாளை எடுத்து வந்து கேட்டில் தட்டி கதவை திறந்து உள்ளே வந்துவிட்டார். கண்டாரோழிகளா, தேவடியாக்களா என்னடி போனில் பேசிக்கொண்ருக்கிறீர்கள் வெளியே வாங்கடி என்று சொன்னார். என்னுடைய மகள் கதவை திறந்தபோது எதிரி கைகளால் அருவாளை வீசினார். நான் தடுத்துவிட்டேன். வெட்டுஎன்னுடைய இடது பக்க முதுகிலும் இடது கை மணிக்கட்டிலும் பட்டுவிட்டது.

3. இரண்டு இடத்திலும் இரத்தக்காயம் ஏற்பட்டது. என்னுடைய மகள் அம்பிகா என்ற நபரும் சிகிச்சைகாக என்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இரண்டு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து புகாரையும்

பெற்றுக்கொண்டார்கள். நான் கூறியதை போலீசார் எழுதிக்கொண்டார்கள். நான் புகார் வாக்குமூலத்தில் கையேயையிட்டேன். புகார் வாக்குமூலம் **அசாஆ 1** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டடப்படும்புகைப்படத்தில் உள்ள அருவாளை வைத்துதான் எதிரி என்னை வெட்டினார். புகைப்படத்தில் உள்ள அருவாள் **அசாபொ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

4. எதிரியின் வீடு எங்கள் வீட்டில் இருந்து எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் எங்கள் வீட்டிற்கு இடது பக்கம் உள்ளது. நடுவில் காம்பவுண்ட் சுவர் உள்ளது. ஒரே காம்பவுண்டில் எங்கள் இருவரின் வீடும் உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை குறுக்கே மதில் சுவர் உள்ளது. மேற்படி வீட்டில் நான் சுமார் எத்தனை வருடங்கள் குடியிருந்தேன் என்றால் 4 வருடங்கள் குடியிருந்தேன். எதிரி பக்கதது வீடு என்பதால் அவரைப்பற்றியும் அவரது குடும்ப உறுப்பினர் பற்றியும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் எனது பேத்தியுடன் கைபேசியில் பேசிக்கொண்டிருந்தபோது வீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் என்னுடன் சேர்த்து 3 நபர்கள் நான், எனது மகள் மற்றும் அம்பிகா என்பவர் இருந்தோம். எங்கள் வீட்டிற்கும் எதிரியின் வீட்ட்டிற்கும் இடைய எவ்வளவு தொலைவு உள்ளது என்றால் எட்டிப்பார்த்து பேசும் தொலைவில் உள்ளது. இரண்டு அடி தூரம் இருக்குமா என்றால் இருக்கும்.

6. சம்பவம் நடந்தபோது சுமார் எத்தனை மணி இருக்கும் என்றால் 9 மணி இருக்கும். எதிரி எத்தனை முறை எங்கள் வீட்டிற்கு வந்து சத்தமாக பேசாதீர்கள் என்று கூறினார் என்றால் சம்பவத்தன்றுதான் எதுக்குடீ சத்தமாக பேசுகிறீர்கள் என்று கேட்டார். முதலில் எதிரி கேட்டை தட்டினாரா அல்லது நிலக்கதவை தட்டினாரா என்றால் பூட்டியிருந்த கேட்டை தட்டினார். எதிரி கேட்டை தட்டி திறக்கும்போது பூட்டப்பட்டிருந்த பூட்டு உடைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

7. எதிரி தகவை தட்டும்போது யார் திறந்தார் என்றால் அம்பிகா என்ற எனது மகள் திறந்தார். எங்கள் வீட்டின் கதவு எத்தனை அடி இருக்கும் என்றால் 2 அடி அகலம் இருக்கும். எனது மகள் அம்பிகா கதவை திறக்கும்போது என்ன நடந்தது என்றால் எதிரி அருவாளை ஓங்கினார் நான் தடுத்தேன் அப்போதுதான் காயம் ஏற்பட்டது. எதிரி அருவாளை எடுத்து வரும்போது நான் முதலில் நின்றேனா அல்லது எனது மகள் முதலில் நின்றேனா என்றால் என்னுடைய மகள் முதலில் நின்றாள் நான் அவருக்கு பின்னால் நின்றேன். என் மகளை தள்ளிவிட்டேன் அதனால் வெட்டி என் மேல் விழுந்தது. சம்பவம் அனைத்தும் வீட்டிற்குள் நடந்தது.

8. எதிரி வைத்திருந்த அருவாள் சுமார் 2 அடி நீளம் இருக்குமா என்றால் அது எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் புகைப்படத்தை காட்டியததின் அடிப்படையில்தான் நீதிமன்றத்தில் புகைப்படத்தை பார்த்து அதில் உள்ள அருவாளால்தான் எதிரி வெட்டினார் என்று கூறினேன் என்றால் சரியல்ல. அந்த அருவாளால்தான் எதிரி என்னை வெட்டினார். என்னை வெட்டிய அருவாள் மரக்கைப்பிடி போட்டது என்றால் சரிதான்.

9. சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் எதிரியின் மகள் 12ம் வகுப்பு படித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சிமளிக்கிறேன் என்றும் அவருடைய மகள் படித்துக்கொண்டிருந்தபோது நாங்கள் சத்தமாக பேசியதால் முதலில் எங்களிடம் வந்து சத்தமாக பேசவேண்டாம் என்று எதிரி எங்களிடம் கூறினார் என்றால் சரியல்ல. மறுபடியும் நாங்கள் சத்தமாக பேசியதால் எதிரி எங்கள் வீட்டில் வந்து சத்தமாக பேசவேண்டாம் என்று கூறியபோது எங்களுக்குள் வாய் தகறாறு எற்பட்டு அதன்பிந் தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றும் அபபோது நான் கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, எதிரி வெட்டியதின் அடிப்படையில்தான் காயம் ஏற்பட்டது.

10. எத்தனை மணிக்கு மருத்துவமனை சென்றோம் என்றால் சம்பவம் நடந்த உடனே சுமார் 9 மணியளவில் மருத்துவமனை சென்றுவிட்டோம். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் எப்போது வந்து விசாரணை செய்தார்கள் என்றால் அன்று இரவே விசாரணை செய்தார்கள். போலீசார் எழுதிக்கொடுத்த தாளில் ரேகை வைக்க

சொன்னார்கள் என்றால் சரிதான. எனக்கு எழுத படிக்கத் தெரியாது என்றால் சரிதான். எனக்கு நீரழிவு மற்றும் இரத்தக்கொதிப்பு நோய்கள் எதுவும் இல்லை. நான் கூறுவதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எனக்கும் எதிரிக்கும் ஏற்கனே இருந்த முன்விரோதம் தொடர்பாக வேண்டுமென்றே மருத்துவமனை சென்று நான் உள்நோயாளியாக சிக்ச்சை எடுத்துக்கொண்டு எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.